அனுப்புநர்

கே.பி.மகேஸ்வரி.M.A.,B.Ed.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
(சென்னை நீங்கலாக)

ந.க.எண்.016971 /டி(4) /2024 நாள் :10.12.2024

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST), டிசம்பர் 2024 – தேர்விற்கான அறிவுரைகள் வழங்குவது குறித்து.

– – – –

தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு (TRUST) 14.12.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான தேர்வு மையங்களின் பட்டியல் (இணைப்பு பள்ளிகளுடன்) ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வு நடத்துவது குறித்து கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை அனைத்து தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்களும் தவறாமல் கடைபிடிக்க உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு 14.12.2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை நடைபெறும். தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களைத் தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.

2. தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) Bilingual முறையில் ஒரே வினாத்தாளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு வழங்கப்படும்.

3. **தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தங்கள் மையத்திற்கான பெயர்ப்பட்டியல், தேவையான வினாத்தாட்கள் மற்றும் OMR விடைத்தாட்கள் போதுமான அளவு பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.**

4. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாட்கள் மற்றும் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படும்.

5. **வினாத்தாள் கட்டுகள் தேர்வு மையத்தில் காலை 8.45 மணிக்குள் சென்றடையும் வண்ணம், வழித்தட அலுவலர் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து வாடகை வாகனம் மூலம் எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

6. தேர்விற்கான வினாத்தாள் தேர்வு துவங்குவதற்கு கால் மணி நேரம் முன்னதாக அதாவது காலை **9.45** மணிக்கு பிரிக்கப்பட்டு காலை **10.00** மணிக்கு தேர்வர்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

7. தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு (HALL TICKET) உள்ள தேர்வர்கள் மற்றும் பெயர் பட்டியலில் பெயர் உள்ள தேர்வர்களை மட்டும் தேர்விற்கு அனுமதிக்க வேண்டும். தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும்பொருட்டு புறச்சரக எண்ணில் தேர்வெழுத அனுமதி வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

8. தேர்விற்கு வருகைபுரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாளில் **P**resent என்பதற்கான **P** என்ற வட்டத்தையும், வருகைபுரியாத தேர்வர் எனில் **Absent** என்பதற்கான **A** என்ற வட்டத்தையும் **கருப்பு_மை பந்து முனை பேனாவினால் அறை கண்காணிப்பாளர்** நிழற்படுத்த வேண்டும்.

9. **மாணவர்களுக்கு வழங்கப்பட்ட OMR விடைத்தாள் அவர்களது பதிவெண்ணிற்குரியதுதானா என்பதை உறுதி செய்த பின்னர் மாணவர் மற்றும் அறை கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும்.**

10. பெயர்ப்பட்டியலில் பெயர், **தலைப்பெழுத்து, பிறந்த தேதி, இனம் (Classification) ஆகியவற்றில் திருத்தம் ஏதேனும் இருப்பின் சிவப்பு மையினால் உரிய திருத்தம் செய்து சான்றொப்பமிட்டு, பெயர்பட்டியலின் இறுதியுள்ள Abstract-ஐ பூர்த்தி செய்து முதன்மைக் கண்காணிப்பாளரின் முத்திரை மற்றும் கையொப்பம் பெற்று OMR விடைத்தாட்களுடன் தேர்வு நாளன்றே ஒப்படைக்க வேண்டும்.**

11. **தேர்வு தொடங்கிய 30 நிமிடத்திற்குள் தேர்வு மையத்தில் தேர்வர்களின் வருகை (Present) மற்றும் வருகை புரியாதோர் (Absent) விபரத்தை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநருக்கு முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்க வேண்டும்.**

12. **தேர்வு முடிந்தவுடன் வழித்தட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் (OMR) / மீதமுள்ள வினாத்தாள் கட்டுகளைப் பெற்று, முதன்மைக் கல்வி அலுவலரிடம் (வினாத்தாள் கட்டு காப்பு மையம்) ஒப்படைக்க வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மைய வாரியப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் OMR விடைத்தாள் கட்டுகளை Logistics Lorry- ல் அனுப்பும் வரை உரிய பாதுகாப்பு வசதியுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.**

முதன்மைக் கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுகளைக் கீழ்க்குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் பாதுகாப்பாக Logistics Lorry ல் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கான Logistics Lorry சேவை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்படும்.

**நாகர்கோவில், விருதுநகர், நீலகிரி, தர்மபுரி, மற்றும் விழுப்புரம்** முதன்மை கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுகளை **14.12.2024** அன்று Logistics Lorry மூலம் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகப் பணியாளர் மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவருடன் மாலை **3.00** மணிக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் உள்ள மந்தணக் கட்டுகளைப் பெற்று பாதுகாப்பாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். **(குறிப்பு: மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் Logistics Lorry மூலம் OMR விடைத்தாட்ளை தேர்வுத்துறை தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கும் பொருட்டு ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும்).**

**<u>வழித்தடங்கள்</u>**

| ROUTE I | ROUTE II | ROUTE III | ROUTE IV | ROUTE V |
|---|---|---|---|---|
| NAGERCOIL | VIRUDHUNAGAR | OOTY | DHARMAPURI | VILLUPURAM |
| TIRUNELVELI | MADURAI | COIMBATORE | KRISHNAGIRI | CUDDALORE |
| TENKASI | THENI | TIRUPPUR | TIRUPATTUR | NAGAPATTINAM |
| TUTICORIN | DINDIGUL | ERODE | TIRUVANNAMALAI | MYLADUDURAI |
| RAMANATHAPURAM | KARUR | NAMAKKAL | VELLORE | THIRUVARUR |
| SIVAGANGAI | TRICHY | SALEM | RANIPET | THANJAVUR |
| PUDUKOTTAI | PERAMBALUR | KALLAKURICHY | KANCHIPURAM | ARIYALUR |
| | CHENGALPATTU | | THIRUVALLUR | |

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்**

| **திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய பொருட்களின் விவரம்** | **அமைய வேண்டிய கட்டுக்கள்** | **ஒப்படைக்க வேண்டிய அலுவலகம்** |
|---|---|---|
| 1. உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Used O.M.R.AnswerSheet) **(PACKET – I)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து துணிப் பையினால் ஒரே கட்டாகக் கட்டி அரக்கு முத்திரையிட வேண்டும். | வழித்தட அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலர்அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். |
| 2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் Unused OMR Answer Sheets + Blank OMR **(PACKET – II)** | | |
| 3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) **(PACKET – III)** | | |
| 4. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். **– Unused Question Booklets தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.** இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்து கொள்ள வேண்டும். |
| 5.பற்றொப்பச்சீட்டுகள் | படிவம் 2–ன்படி | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் |

ஓம்/–
இணை இயக்குநர் (பணியாளர்)

**இணைப்பு :**

1. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கான அறிவுரைகள்.
2. தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கான முக்கிய அறிவுரைகள்.
3. பற்றொப்பச்சீட்டு மாதிரி படிவம்.

**நகல்:**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். (சென்னை நீங்கலாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை) (சென்னை நீங்கலாக)

} – உரிய நடவடிக்கைக்காக

## தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:

1. தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு 14.12.2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 12.30 மணி வரை தேர்வு நடைபெறும்.
2. வினாத்தாள் கட்டுகளை வழித்தட அலுவலரிடமிருந்து காலை 8.45 மணிக்குள் பெற்று உரிய அலமாரியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.
3. தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) Bilingual முறையில் ஒரே வினாத்தாளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு வழங்கப்படும்.
4. கருப்பு மை கொண்ட பந்துமுனை (பால்பாயின்ட்) பேனாக்களை கையிருப்பில் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
5. மாணவர்கள் ஒரே இடத்தில் குழுமுவதைத் தவிர்க்க தேர்வு மையத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் Seating Plan ஐ அமைக்க வேண்டும்.
6. தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தேர்வறைக் கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு நடத்துதல் குறித்த அறிவுரைகளை காலை 09.15 மணிக்கு வழங்க வேண்டும்.
7. தேர்வு அறை கண்காணிப்பாளர்களிடமிருந்து அலைபேசிகளைப் பெற்றுக் கொண்டு, தேர்வு முடிந்த பிறகே திரும்ப அவர்களுக்கு வழங்க வேண்டும்.
8. OMR விடைத்தாட்களை தேர்வறைக் கண்காணிப்பாளரிடம் காலை 9.30 மணிக்குக் கொடுத்துத் தேர்வறைக்கு அனுப்ப வேண்டும்.
9. தேர்வர்களை காலை 9.40 மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க அறைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
10. காலை 9.45 மணிக்கு வினாத்தாள் கட்டுகள் பிரிக்கப்பட்டு, தேர்வறைக் கண்காணிப்பாளர்களுக்கு காலை 9.50–க்குள் வழங்கப்பட வேண்டும்.
11. தேர்விற்கான வினாத்தாட்கள் அடங்கிய உறை காலை 9.55 மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் பிரிக்கப்பட்டு, 10.00 மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
12. தேர்வு முடிந்தவுடன் 12.30 மணிக்கு தேர்வர்களிடமிருந்து OMR விடைத்தாட்களை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
13. தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களை தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க கூடாது.

14. பெயர் பட்டியலில் திருத்தங்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தங்கள் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். மேலும் வருகைபுரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

15. தங்கள் அறைக்கு வழங்கப்பட்ட பெயர் பட்டியலில் அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் தேர்வரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்ற அறிவுரையைத் தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

16. தேர்வு முடிவுற்ற பின்னர், அறைக்கண்காணிப்பாளர்களிடமிருந்து வருகை புரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாட்களை முதன்மைக் கண்காணிப்பாளர் சேகரித்து ஆய்வு செய்து, அனைத்து OMR விடைத்தாட்களின் பதிவேண் ஏறுவரிசையில் அடுக்கிக் கொள்ள வேண்டும்.

17. OMR விடைத்தாட்களில் மேற்பகுதியில் Attendance No என்ற பகுதியில் 001 எனத் துவங்கி தொடர்ச்சியாக 002,003,004. . . . . . என கருப்பு மை பந்து முனை பேனாவினால் எழுத வேண்டும். உதாரணமாக , ஒரு தேர்வு மையத்தில் வருகை புரிந்தோரின் எண்ணிக்கை (No. of present candidates) 232 எனில், கடைசி OMR தாளில் 232 என அதே எண்ணில் முடிவடைந்தால் அத்தேர்வு மையத்தில் தேர்வெழுதிய அனைத்து தேர்வர்களின் OMR விடைத்தாட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது என உறுதி செய்து கொள்ளலாம். அதன் பின்னரே, packing செய்யப்பட வேண்டும்.

18. தேர்வு முடிந்தவுடன் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்க்குறிப்பிட்ட படிவத்தினைப் பூர்த்தி செய்து Packet – III உடன் இணைத்தனுப்ப வேண்டும்.

**Format - 1**

| Centre No.& Name | Total No. of Registered Candidates | Total No. of Present Candidates (used OMR) | Total No. of Absent Candidates (unused OMR) | Total No. of Blank OMR (unused OMR) |
|---|---|---|---|---|
| | | | | |

**Format - 2**

| Centre No.& Name | Total No. of Question papers received | Total No. of Question papers used (Present) | Total No. of balance Question papers |
|---|---|---|---|
| | | | |

**19.** தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு பணிபுரிந்த முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், அறைக் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர்களின் உழைப்பூதியம் பற்றொப்பச்சீட்டுகள் இணைப்பிலுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் அன்றைய தினமே ஒப்படைக்க வேண்டும்.

**20.** தேர்வு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட வழித்தட அலுவலரிடம் கீழ்க்குறிப்பிட்டவாறு விடைத்தாள் கட்டுகளை ஒப்படைக்க வேண்டும்.

## தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் திருப்பி ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்

| திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய பொருட்களின் விவரம் | அமைய வேண்டிய கட்டுக்கள் | முகவரி |
|---|---|---|
| 1. உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Used O.M.R.AnswerSheets Present Candidates) **(PACKET – I)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) துணிப் பையைக் கொண்டு ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிடப்பட வேண்டும் | படிவம்–1–ல் குறிப்பிட்டுள்ளவாறு கட்டின் மீது எழுத வேண்டும். |
| 2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் UnusedOMR Answer Sheets+ Blank OMR Sheet) **(PACKET – II)** | | |
| 3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll)<br><br>4. FORMAT – 1 and 2 **(PACKET – III)** | | |
| 5. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் – **Unused Question Booklets தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.**<br>இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |
| பற்றொப்பச்சீட்டுகள் | படிவம் 2ன்படி | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் |

<u>தேர்வு அறைக்  கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:</u>

1. 14.12.2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை தேர்வு நடைபெறும்.

2. தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் 9.30 மணிக்கு தேர்வறைக்குச் செல்ல வேண்டும்.

3. தேர்வர்களை 9.40 மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க வேண்டும்.

4. தேர்வர்கள் தேர்வறைக்கு வந்தவுடன் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினைச் சரிபார்த்து அவர்களுக்குண்டான OMR விடைத்தாட்களை வழங்க வேண்டும்

5. 9.45 மணிக்கு வினாத்தாள் உறை பெறப்பட்டு, 9.55 மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் வினாத்தாள் உறை பிரிக்கப்பட்டு 10.00 மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

6. **தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் வினாத்தாள் புத்தகத்தில் (Question Booklet) விடைகளைக் குறிக்க வேண்டாம் என்றும், வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் மட்டுமே (OMR Answer Sheet) விடைகளைக் குறிக்க வேண்டும் என்பதனையும் தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்த வேண்டும்.**

7. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் என ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாள் மற்றும் விடைத்தாள் மட்டுமே வழங்கப்படும்.

8. தேர்வு முடிந்தவுடன் தேர்வர்கள் வினாத்தாள் புத்தகத்தை (Question Booklet) எடுத்துச் செல்லஅனுமதிக்க வேண்டும்.

9. இத்தேர்விற்கு OMR (ANSWER SHEET) விடைத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தேர்வர்கள் <u>விடைத்தாளில் உள்ள கலங்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன.</u> அனைத்து தேர்வறைகளிலும் தேர்வர்கள் விடைத்தாட்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரைகளைத் தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். தவிரவும் ஒவ்வொரு விடைத்தாளில் தேர்வர் தேர்விற்கு வருகைபுரிந்த விவரம் (Status of Candidate) 'P' Or 'A' என்ற வட்டத்தை கருப்பு மை பந்து முனைப் பேனாவினால் அறை கண்காணிப்பாளர் (Hall Supervisor) நிழற்படுத்த வேண்டும்.

**10.** அறைக் கண்காணிப்பாளர் OMR விடைத்தாளில் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் **அறை கண்காணிப்பாளர்கள்** கையொப்பமிட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் தாம் எந்த கலத்திற்கான விடை சரி என நினைக்கிறாரோ அந்த கலம் **கருப்பு மை பந்துமுனை (பால் பாய்ண்ட்) பேனாவினால் மட்டுமே நிழற்படுத்த வேண்டும் என தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.**

11. பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

12. தேர்வு முடிந்தவுடன் 12.30 மணிக்கு வருகைபுரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

13. தேர்வினை நல்ல முறையில் நடத்திட வேண்டும்.

ஓம்/–
**இணை இயக்குநர் (பணியாளர்)**

படிவம் –1

தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு – டிசம்பர் 2024

பெறுநர்:

துணை இயக்குநர் (பல்வகைத் தேர்வுகள்)

அரசுத் தேர்வுகள் இயக்ககம்,

சென்னை – 600 006

தேர்வர்களின் எண்ணிக்கை:

வருகை புரிந்தோர் எண்ணிக்கை:

வருகை புரியாதோர் எண்ணிக்கை:

அனுப்புநர்:

தேர்வு மைய எண்:

தேர்வு மையத்தின் பெயர்:

தேர்வு மையத்தின் முகவரி:

துறை அலுவலர்

கையொப்பம்

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்

முத்திரை மற்றும் கையொப்பம்

படிவம் –2

## DECEMBER 2024 - TRUST EXAM ACQUITTANCE

**REVENUE DISTRICT NO. AND NAME :**

**CENTRE NO. AND NAME :**

**NO OF CANDIDATES :**

| SL. NO. | NAME & DESIGNATION | DESIGNATION AT THE EXAMINATION CENTRE | NO. OF DAYS WORKED | RATE PER DAY | TOTAL | SIGNATURE (Should be in blue ink) |
|---|---|---|---|---|---|---|
| 1 | | Chief Superintendent | 1 | 106 | | |
| 2 | | Departmental officer | 1 | 106/66 | | |
| 3 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 4 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 5 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 6 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 7 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 8 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 9 | | Hall Supervisors | 1 | 80/53 | | |
| 10 | | Clerk / JA | 1 | 53 | | |
| 11 | | OA | 1 | 27 | | |
| 12 | | Waterman | 1 | 20 | | |
| 13 | | Sweeper | 1 | 20 | | |
| 14 | | Scavenger | 1 | 20 | | |

(Signature of Chief Superintendent)

**(Should be in Green Ink.....Compulsory......in every Page)**

ACQUITTANCE SHOULD BE IN PORTRAIT FORMAT